# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பாசறை

மே 2020
திபி 2051 . மலர் 2 . இதழ் 5

## செய்தி மடல்

## நாம் தமிழர் கட்சி



# பதிப்புரை

## இவ்விதழில்


1. அண்ணா எனும் தமிழ் தேசியவாதி
2. மதுவிலக்கு
3. நிகழ்வுகள்
4. மக்கள் களம்


> “எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது."
>
> \- தலைவர் பிரபாகரன்

கொரனா அதிதீவிரமாக பரவிவரும் இந்நிலையிலும், நாம் தமிழர் உறவுகளாகிய நாம், ஆற்றிய களப்பணி கண்டு நம்மை நாமே பாராட்டிக் கொள்ளமுடியும். காய்கறிகளும் மளிகைப்பொருட்களும் உணவுப் பொட்டலுங்களும் நம்மால் முடிந்த அளவு வழங்கினோம்.

10 முகாம்களில் இருக்கும் 414 இற்கும் அதிகமான ஈழத்தமிழ் குடும்பங்களுக்கு நம் உதவி சென்று சேர்ந்திருக்கிறது.

இதையும் நம் எதிரணி தோழமைகள் பார்த்துவிட்டு, எப்படி இவர்களுக்கு பணம் கிடைத்தது என கேட்கக் கூடும். அவர்களுக்குப் புரியாது, இனத்தின் முன்னேற்றத்திற்காக களத்தில் இறங்கிய கூட்டத்திற்கு பணம் ஒரு பொருட்டல்ல என்று.

கைகோர்போம். களமாடுவோம்.

ஆசிரியர் குழு

s

*"தமிழ்நாடு தமிழருக்கே என்பதில் நாத்திகமோ, மதவெறியோ, இனவெறியோ தொக்கி இருக்கிறது என்று யாராவது சொல்ல வருவார்களேயானால், அவர்கள் ஒன்றும் விஷயம் அறியாதவர்கள், அல்லது வேண்டுமென்றே விஷமப்பிரச்சாரம் செய்யும் அயோக்கியர்களே யாவார்கள்."*

இது சீமானின் வார்த்தைகளோ அல்லது மணியரசனின் வார்த்தைகளோ அல்ல. அறிஞர் அண்ணா 1939 இல் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ எனும் கட்டுரையில் எழுதியவை. அயோக்கியர்கள் யார் என்பதை அண்ணாவே காட்டுகிறார்.

ஒரு பத்திரிக்கையில் அண்ணாவின் சிலையைக் குறிப்பாக உணர்த்தி ஒரு கேலிச் சித்திரம் வரைய உடன்பிறப்புகள் பொங்கிவிட்டனர். அண்ணாவை கேலி செய்யும் உரிமை தங்களுக்கு மட்டும் தான் உண்டு என்ற எண்ணம் போலும். அவர்களுக்கு வரலாற்றைச் சொல்லிக் கொடுக்கும் கடமையும் கூட நம்மையே சேருகிறது.

சரி, கொள்கையைத் தான் விட்டார்கள் ( விற்றார்கள் என்பது தான் சரி ). குறைந்தபட்சம் அண்ணாவை மதிக்கவாவது செய்தனரா?

**முரசொலியின் கதை**

முரசொலி திமுக வின் அதிகாரப் பூர்வமான செய்தி தெரியுமா உங்களுக்கு?

அண்ணா முதலில் நடத்திவந்த பத்திரிக்கை, திராவிட நாடு. ஆங்கிலத்தில் ஹோம்ரூல் என வெளிவந்தது. திராவிட நாடு பத்திரிக்கையின் உரிமம் முடிந்த பிறகு, அண்ணா ‘காஞ்சி’ பத்திரிக்கையைத் தொடர்ந்து நடத்தி வந்தார்.



**அறிவகத்தின் இன்றைய நிலை**

திமுக ஆரம்பிக்கப்பட்டப் பிறகு, திமுக வின் அதிகாரப்பூர்வ இதழாக ‘நம் நாடு’ தொடங்கப்பட்டது. கருணாநிதி ஒருபுறம் தன்னை முன்னிறுத்த ‘முரசொலி’ நடத்தி வந்தார்.
அண்ணா மறைந்து, கருணாநிதி ஆட்சிக்கு வந்ததும் செய்த முதல் வேலை, ‘நம் நாடை’ ஒழித்தது தான். அண்ணாவின் ‘நம் நாடு’ மறைக்கப்பட்டு, ‘முரசொலி’ அதிகாரப்பூர்வ இதழானது. அண்ணா வெளியிட்ட ‘காஞ்சி’ , ‘நம் நாடு’ இதழ், பாதுகாக்கப்படக்கூடவில்லை.

**திருமண மண்டபமான அறிவகம்**

1949 இல் ஆரம்பிக்கப்பட்ட திமுக, 1951 முதல் தன் சொந்தக் கட்டடத்தில் செயல்படத் தொடங்கியது. ராயபுரத்தில், அக்கட்டடத்திற்கு அண்ணா இட்ட பெயர் அறிவகம்.
அறிவகத்தின் இன்றைய நிலை தெரியுமா? அறிவாலயம் கட்டப்பட்டதும், அறிவகத்தைத் திருமண மண்டபமாக்கினார், கருணாநிதி. அண்ணாவின் அயராத உழைப்பப் பார்த்த அறிவகம், திமுகவின் அறிவில்லாதத் தன்மைக்கு சாட்சியாக நிற்கிறது. அறிவகத்தை, ஒரு நூலகமாக ஆக்கக்கூட மனம் வரவில்லை, இன்று அண்ணாவைப் பற்றி பேசுபவர்க்கு.

**அண்ணாவிற்கு நினைவில்லம்**

தமிழகத் தலைநகரான சென்னையில் அண்ணாவிற்கு நினைவில்லம் இல்லை என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?

சென்னையில் அண்ணாவின் நுங்கப்பாக்கம் வீடு, ‘தாயகம்’ இன்றும் இருக்கிறது. திமுக வின் வரலாற்றில் முக்கிய இடம்பிடித்த அவ்வீட்டை கருணாநிதி அவர்கள் நினைவில்லம் ஆக்கவில்லை. அவ்வளவு ஏன், காஞ்சியில் உள்ள அண்ணாவின் வீட்டைக்கூட 1980 இல், எம் ஜி ஆர் ஆட்சிக்கு வந்துதான் நினைவில்லம் ஆக்கினார். கருணாநிதி அவர்கள் அண்ணாவிற்கு அமைத்ததெல்லாம், ஈரோட்டில், பெரியாரின் வீட்டின் கொல்லைப்புறத்தில் அண்ணா தங்கியிருந்த அறை மட்டும் தான்.

13 நாடகங்கள், 113 சிறுகதைகள், 129 ஆங்கில கட்டுரைகள், 316 கடிதங்கள், 400 இற்கும் மேற்பட்ட ஆங்கில உரைகள், 3000 இற்கும் மேற்பட்ட கட்டுரைகள்,


12,775 சொற்பொழிவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அண்ணாவின் படைப்புகள் ஒரு பெரும் நூலகமாகப் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். அண்ணாவின் குடும்பத்தினர் பாதுகாத்து வைத்துள்ள 1476 கட்டுரைகள் மட்டுமே நமக்கு மிச்சம். அண்ணாவின் படைப்புகள் முறையாக தொகுக்கக்கூடப்படவில்லை என்பது தான் கொடுமையின் உச்சம்.
நூலகங்களுக்கு அண்ணாவின் பெயரை வைத்த கருணாநிதி அவர்கள், அண்ணாவின் படைப்புகள் வெளிவர உதவாதது ஏனோ?

**அண்ணா எனும் தமிழ் தேசியவாதி**

திராவிட நாடு என வலியுறுத்திய போதும், மாநில சுயாட்சியைத் தூக்கிப்பிடித்த போதும், தமிழர்கள் மற்றவர் கீழ் அடிமையாவதை ஏற்காதவர் அண்ணா.

அவர் கோரிய திராவிட நாடும் ஒரு கூட்டாட்சி நாடு தான். அங்கு தமிழர் நாட்டைத் தமிழரே ஆள்வர் என்றார்.
தமிழர்களை சாதி மதம் கடந்து ஓரினமாக இணைக்க தமிழை இணைப்புச் சங்கிலியாகப் பயன்படுத்தியவர் அண்ணா. தமிழர் இலக்கியங்களையும் தமிழ் பாரம்பரிய உணர்வையும் அடிநாதமாகக் கொண்டு, தன் கொள்கையைக் கட்டமைத்தவர், அண்ணா. அண்ணாவின் மறைவுக்குப் பிறகு அவரது கொள்கையையும், கனவையும் குழி தோண்டிப் புதைத்தக் கூட்டம், தேர்தல் நெருங்க நெருங்க அண்ணாவைப் புகழ்கிறது.

மீண்டும் ஒருமுறை ஏமாற மக்கள் தயாராக இல்லை.



சேர சோழ பாண்டிய வேந்தர்களால் தீந்தமிழ் திருநாட்டில் நிலைநாட்டடப்பட்ட அறம் என்பது இதுவரை ஆண்ட திராவிடக் கட்சிகளால் இத்தாய் தமிழ்நாட்டில் சீர்குலைக்கப்பட்டது என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

இயற்கை இந்த மண்ணில் நமக்கு இன்றுவரை எண்ணற்ற வளங்களை வாரி வழங்கி வந்திருக்கிறது. அந்த வளங்களை யெல்லாம் இயற்கைக்கும் எந்த உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் உபயோகப்படுத்தும் தொழில்நுட்ப முறையும் தற்போது நம்மிடையே உள்ளது. இவையெல்லாம் ஆகச் சிறந்த முறையில் பயன்படுத்தி உற்பத்தியை பெருக்கி இந்த நாட்டின் குடிகளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்காமல் இந்த நாட்டின் குடிமகன்களுக்கு சாராயம் ஊத்தி கொடுத்து அவர்களின் மன வலிமையையும் உடல் வலிமையையும் கொஞ்சம் கொஞ்சமாக கொலை செய்து தமிழச்சிகளின் தாலியை அறுத்து தான் அரசாங்கத்தை நடத்த முடியும் என்ற திராவிட கட்சிகளின் கூற்றை ஒருநாளும் ஏற்கமுடியாது.

இதற்குப் பெயர் ஆண்மையற்ற அரசாங்கம் என்றும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி மக்களுக்கு செய்யும் துரோகம் அதாவது ஆகப் பெரும் தேசத் துரோகத்தை திராவிட கட்சிகள் இந்த தமிழ் தேசத்திற்கு செய்துகொண்டிருக்கின்றன என்பது தான் உண்மை.

எது தேச துரோகம் என்று கூட தெரியாத அறிவிலிகளால் இந்த தேசம் இன்றுவரை ஆளப்படுகிறது என்பதுதான் வருந்தத்தக்கது. வாக்கின் மூலம் உனக்கான தலைவனை நீ தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற ஆகப்பெரும் சனநாயகத்தினை சட்டத்தின் மூலமாக இந்த நாட்டின் அனைத்து குடிகளுக்கும் சாதி, சமய, வர்க்க வேறுபாடில்லாமல் நம் முன்னோர்கள் போராடி நமக்குப் பெற்றுத் தந்தனர்.

ஆனால் மக்களோ வாக்கின் சிறப்பை, உரிமையை, பெருமையை உணராமல் கேவலம் பணத்திற்காக வாக்கை விற்று மக்களைப் பற்றி கவலைப்படாமல் தங்களின் சுயநலத்திற்காக செயல்படும் அயோக்கியர்களை ஆட்சியில் அமர செய்ததும் மக்கள் இந்த தேசத்திற்கு செய்த துரோகமாகும். இதனை தேசத்துரோகம் என்றும் வரையறை செய்யலாம். அம்மக்கள் இந்த தேசத்திற்கானவர்களாக இல்லாதபோது அந்த சுயநல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்னன் மட்டும் பொது நலத்தோடு இருக்க வேண்டும் என்று


எதிர்பார்ப்பது அம்மக்களின் அறிவீனமாகும். நன்மையும் தீமையும் கலந்தததுதான் வாழ்வு இந்த உலகத்தில் நல்லவர்கள் என்ற யாரும் கிடையாது என்ற மக்களின் கூற்று திராவிடக் கட்சிகளின் ஆட்சியின் பால் ஏற்பட்ட விரக்தியின் வெளிப்பாடாகும்.

தீமை என்ற ஒன்று இருந்தால் அங்கு நன்மை என்ற ஒன்று கட்டாயமாக இருக்கும் அதுதான் இயற்கை. நமக்கான மன்னவனை இந்த மண்ணுக்குரிய வரை மக்களுக்குரியவனை நாம்தான் தேடிச் செல்ல வேண்டும். மதுவிலக்கை அமல்படுத்த முடியாது என்று உச்சநீதிமன்றம் வரை சென்றுள்ள திராவிடக்கட்சிகளின் போக்கு திராவிடக் கட்சிகள் மக்களுக்கு செய்யும் தேசத் துரோகத்தினை நீதிமன்றமும் அங்கீகரிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் எண்ணத்தை வெளிப்படுத்துகின்றது.


இந்த தேசத் துரோகத்தினை நீதிமன்றத்தின் துணையோடு நிறைவேற்றத் துடிக்கும் அரசாங்கமும், நீதிமன்றங்களும், திராவிட மற்றும் தேசிய கட்சிகள் மக்களால் வீழ்த்தப்பட்டு தமிழ் மக்களுக்கான தமிழ்தேசிய பேரரசு மக்களால் நிறுவப்பட வேண்டும். தமிழ்தேசிய பேரரசு ஆட்சி அமைந்து நிலைபெறும் வரை தமிழ் மக்களின் நல்வாழ்வு என்பது வெறும் வெற்றுக் கனவே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

- உஷா கோபாலகிருஷ்ணன்

- 25 ஏப்ரல் - நம் பாசறையின் சார்பில் தொழில்நுட்பக் கருத்துப்பரவல் திட்டத்தில் முதல் கட்டமாக 25 ஏப்ரலில் இணையவழி வகுப்பு நடந்தது.




- 30 ஏப்ரல் - நம் பாசறையின் நிகழ்வுகளைப் பதிவுசெய்ய புதிய யூடியூப் வலையொளிப் பக்கம் தொடங்கப்பட்டது.
- கொரனா ஊரடங்கினால் வேலைவாய்ப்பு இழந்த ஈழத்தமிழ்ச் சொந்தங்களுக்கு நம் பாசறையின் சார்பாக உதவிப் பொருட்கள் செய்யப்பட்டன.







தகவல் தொழில்நுட்பப்
பணியாளர்கள் பாசறை

நாம் தமிழர் கட்சி